# தென்னிந்திய திருச்சபை, சென்னைப் பேராயம்
# கோடம்பாக்கம் குருசேகரம்
# கோடம்பாக்கம் சென்னை - 600 024

தமிழக அரசு அறிவித்துள்ள நிலையான செயல்பாட்டு நடைமுறைகள் (SOP - Standard Operating Procedures)-ன்படி, **20.09.2020** முதல் ஆலயங்களில் ஆராதனையின்போது, சபையார் கடைபிடிக்க வேண்டிய வழிகாட்டு விதிமுறைகள்

கர்த்தருக்குள் அன்பார்ந்த திருச்சபையாரே,
கிறிஸ்துவின் திருப்பெயரில் அன்பின் வாழ்த்துக்கள்!

கோவிட் - 19 என்ற தொற்று பரவல் காரணமாக கடந்த ஐந்து மாதங்களாக ஆலயத்தில் நாம் ஒன்று கூடி ஆராதனை செய்ய முடியாத சூழ்நிலை இருந்தது. தற்போது 20.09.2020 முதல் ஆலயத்தில் நாம் ஆராதனை நடத்த திட்டமிட்டுள்ளோம். ஆராதனை நடத்துவதற்காக தமிழக அரசு சில கடுமையான கட்டுப்பாடுகளுடன் தளர்வுகளை அறிவித்துள்ளது. இந்த வழிகாட்டு முறைகள் நமது ஒவ்வொருவரின் நலனுக்காவும் சமூக நலன் கருதியும் வெளியிட்டுள்ளதால், இதை நாம் கண்டிப்புடன் கடைபிடிக்க கடமைப்பட்டுள்ளோம்.

ஒவ்வொரு ஞாயிற்று கிழமையும் **நான்கு** ஆராதனைகள் நடைபெறும். அனைத்தும் தமிழ் ஆராதனைகள்.

கீழ்கண்ட முறைப்படி நமது ஆலய ஆராதனை நடைபெறும்.

**ஆராதனை நேரம்:**

| தேதி (20-09-2020) | நேரம் | கவர் எண் |
|---|---|---|
| | காலை 6:30 | 1 முதல் 300 |
| | காலை 8:00 | 301 முதல் 600 |
| | காலை 9:30 | 601 முதல் 900 |
| | மாலை 6:30 | 901 முதல் கடைசி கவர் எண் வரை மேலும் காலை ஆராதனைகளில் பங்கு பெற முடியாதவர்கள் கலந்து கொள்ளலாம் |

| தேதி (27-09-2020) | நேரம் | கவர் எண் |
|---|---|---|
| | காலை 6:30 | 901 முதல் கடைசி கவர் எண் வரை |
| | காலை 8:00 | 1 முதல் 300 |
| | காலை 9:30 | 301 முதல் 600 |
| | மாலை 6:30 | 601 முதல் 900. மேலும் காலை ஆராதனைகளில் பங்கு பெற முடியாதவர்கள் கலந்து கொள்ளலாம் |

| தேதி (4-10-2020) | நேரம் | கவர் எண் |
|---|---|---|
| | காலை 6:30 | 601 முதல் 900 |
| | காலை 8:00 | 901 முதல் கடைசி கவர் எண் வரை |
| | காலை 9:30 | 1 முதல் 300 |
| | மாலை 6:30 | 301 முதல் 600. மேலும் காலை ஆராதனைகளில் பங்கு பெற முடியாதவர்கள் கலந்து கொள்ளலாம் |

| தேதி (11-10-2020) | நேரம் | கவர் எண் |
|---|---|---|
| | காலை 6:30 | 301 முதல் 600 |
| | காலை 8:00 | 601 முதல் 900 |
| | காலை 9:30 | 901 முதல் கடைசி கவர் எண் வரை |
| | மாலை 6:30 | 1 முதல் 300. மேலும் காலை ஆராதனைகளில் பங்கு பெற முடியாதவர்கள் கலந்து கொள்ளலாம் |

| | |
|---|---|
| ஆராதனை நேரம்: | காலை 6:30, காலை 8:00, காலை 9:30, மாலை 6:30 (ஒவ்வொரு வாரமும் ஆராதனை நேரம் சுழற்சி முறையில் நடைபெறும்) சபை மக்கள் தாங்களே இந்த சுழற்சி முறையை கடைபிடித்து வருமாறு அன்புடன் அழைக்கப்படுகிறீர்கள். |

<u>கடைபிடிக்க வேண்டிய விதிமுறைகள்</u>:

1. ஒரு ஆராதனையில் 100 பேர் மட்டும் பங்கேற்கலாம்.

2. 10 வயதிற்குட்பட்ட சிறுவர்கள், 65 வயதிற்கு மேற்பட்ட பெரியவர்கள், கர்ப்பிணிப் பெண்கள் பலவிதமான சுகவீனங்களுக்காக மருத்துவ சிகிச்சையில் இருப்போர், காய்ச்சல், சளி, இருமல் உள்ளவர்கள் ஆராதனையில் பங்கேற்க வேண்டாம்.

3. ஆலயத்திற்குள் இரு நபர்களுக்கிடையே சுற்றிலும் ஆறு அடி இடைவெளி விட்டு உட்கார வேண்டும்.

4. ஆலயத்திற்கு உள்ளே வரும்பொழுது முன் வாசல் வழியாக வர வேண்டும். வெளியில் செல்லும் போது அனைத்து வாசல்களையும் பயன்படுத்திக் கொள்ளலாம்.

5. காலணிகளை ஆலயத்திற்கு வெளியே தகுந்த இடைவெளி விட்டு வைக்கவேண்டும். வாகனங்களில் வருபவர்கள், வாகனத்திலேயே காலணிகளை விட்டுவிட்டு வருவது நல்லது.

6. வாகனங்களை தகுந்த இடைவெளி விட்டு நிறுத்தவேண்டும்.

7. ஆலயத்திற்குள் நுழையும்போது, ஆறு அடி இடைவெளி விட்டு வரிசையில் வரவேண்டும். கைகளில் கிருமி நாசினி தெளிக்கப்படும்.

8. முகக்கவசம் (Face Cover/Mask) அனைவரும் கண்டிப்பாக அணிந்திருக்க வேண்டும். முகக் கவசம் அணியும்போது மூக்கு, வாய் இரண்டையும் சேர்த்து மறைத்திருக்க வேண்டும்.

9. தெர்மல் ஸ்கேனர் (Thermal Scanner) வைத்து உடல் வெப்பம் பரிசோதிக்கப்படும். காய்ச்சல் இல்லை என்று உறுதி செய்யப்பட்ட பின் ஆலயத்திற்குள் செல்ல அனுமதிக்கப்படுவர்.

10. முதலில் வருபவர்களுக்கு முன் அனுமதி வழங்கப்படும். ஆலயத்திற்குள் இடம் இல்லாலிட்டால், PARISH HALLலில் குறிப்பிட்ட இடைவெளியுடன் போடப்பட்டுள்ள இருக்கைகளில் உட்கார வேண்டும்.

11. ஆலய வளாகத்தில் ஐந்து பேர்களுக்கு மேல் கூடிப்பேசுவது தவிர்க்கப்பட வேண்டும்.

12. ஆலயத்திற்குள், கைகுலுக்கவோ, அருகில் நின்று பேசவோ, புத்தகங்கள் அல்லது பொருட்களை வாங்கவோ கொடுக்கவோ கூடாது.

13. ஆலயத்திற்குள், ஆராதனைமுறை கையேடு மற்றும் பாட்டு புத்தகங்கள் கொடுக்க தடை செய்யப்பட்டுள்ளது.

14. ஆலயத்திற்குள், சபை மக்களோ, ஆலய பாடல் குழுவினரோ பாடல்கள் பாட அனுமதியில்லை. ஒலி, ஒளி மூலம் பாடல்கள் இயக்கப்படும்.

15. சபையார் உட்காந்திருக்கும் இடத்தில் வந்து காணிக்கை எடுக்க தடை செய்யப்பட்டுள்ளது. ஆராதனை முடிந்து வெளியில் செல்லும்போது, வாசலருகில் வைக்கப்பட்டுள்ள பெட்டிகளில் காணிக்கைகள் மற்றும் சந்தா உறைகளைப் படைக்கலாம்.

16. பிறந்தநாள், திருமணநாள் காண்பவர்கள் தாங்கள் இருக்குமிடத்தில் எழுந்து நிற்க வேண்டும். அப்பொழுது அவர்களுக்காக ஜெபிக்கப்படும்.

17. கரங்களால் தொட்டு கொடுக்கப்படும் திருமுழுக்கு, திருவிருந்து ஆகியவை தற்சமயம் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

18. ஞாயிறு பள்ளி, பாடகர் குழுவின் பாடல் பயிற்சி, ஐக்கியச் சங்கங்களின் கூட்டங்கள் போன்றவை நடைபெறாது.

19. ஆலய வளாகத்தில் எச்சில் துப்பக்கூடாது.

20. உபயோகிக்கப்பட்ட முகக்கவசம் (Face Cover/Mask), கையுறைகளை(Gloves) குப்பைத்தொட்டிகளில் போடவேண்டும்.

21. ஆராதனைக்கு முன்னும் பின்னும், ஆலயத்திற்கு உள்ளும் புறமும் கிருமி நாசினி தெளித்து சுத்தம் செய்யப்படும்

22. ஆலயத்தில் வந்து ஆராதனையில் கலந்து கொள்ள இயலாதவர்கள், வீட்டிலிருந்தவாரே நமது ஆலய வலைதளம் (Church You Tube) மூலம் பங்கேற்று பயனடையுமாறு அன்புடன் வேண்டுகிறோம்.

கொரோனா வைரஸ் என்ற இந்த ஆட்கொல்லி முற்றிலுமாக ஒழிக்கப்பட நாம் அனைவரும் ஒன்று கூடி ஜெபிப்போம். சாதாரண நிலை திரும்பும் வரை இந்த வழிபாட்டு முறை தொடரும். நாம் அனைவரும் சிரமம் பார்க்காது இந்த விதிமுறைகளைக் கடைப்பிடிப்போம். சபைமக்கள் தங்கள் முழு ஒத்துழைப்பையும் நல்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்ளுகிறோம்.

கர்த்தர் உங்கள் ஒவ்வொருவரையும் ஆசீர்வதித்து காத்துக்கொள்வாராக!

**கர்த்தர் பணியில்**
**உங்கள் ஆயர்,**
**செயலர், பொருளர்**
**மற்றும் சேகரக்குழுவினர்.**
**கோடம்பாக்கம் குருசேகரம்**
**12.09.2020**